# எல்லாவற்றிலும் முக்கியமானது

படம் 1
ஒரு நாள் ரொட்வீசன் என்ற காட்டில் இருக்கும் மிருகங்களுக்கு இடையில் ஒரு பெரிய வாக்குவாதம் நடைபெற்றது.

படம் 2
முயல் கூறியது: „எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால், நீளமான காதுகள் இருப்பது. **நீளமான காதுகள்** இருந்தால், ஒரு இடி அல்லது ஒரு அபாயம் வரப்போவதாக சந்தேகப்படுகின்ற சிறிய சப்தத்தை உடனே அவதானித்து சரியான நேரத்தில் ஓடிப் போகலாம்."

படம் 3
„சிலவேளை அது அப்படி இருக்கலாம்", என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 4
„நான் அப்படி நினைக்கவில்லை", என்று முள்ளம்பன்றி கூறியது, „எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால், **முட்கள்** இருப்பது. முட்கள் இருந்தால், பயமில்லை அதோடு பாதுகாப்பும்".

படம் 5
„சிலவேளை அது அப்படி இருக்கலாம்", என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 6
„அது உண்மை இல்லை", என்று ஒட்டகச்சிவிங்கி கூறியது, ஒரு **நீளமான கழுத்து** இருந்தால் மட்டும்தான், மரத்திலுள்ள மிருதுவான இலைகளுக்கு அருகில் போகலாம், விஷேஷமாக புற்கள் காய்ந்தும் அதோடு நிலம் வரண்டு இருக்கும் போதும்".

படம் 7
„சிலவேளை அது அப்படி இருக்கலாம்", என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 8
"நான் நினைக்கிறேன்", தவளை கூறியது, „எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால், **பச்சையாக** இருப்பது, அப்பதான் எங்களை மறைக்கலாம் அதோடு எதிரியிடமிருந்து தப்பிச் செல்லலாம்".

படம் 9

„சிலவேளை அது அப்படி இருக்கலாம்“, என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 10

„அப்படியென்றால்”, கீச்சென்று பறவை கத்தியது, “இது தான் எல்லாவற்றிலும் முக்கியம், **செட்டைகள்** இருப்பது. நாங்கள் போதுமான அளவு மேலே உயரப் பறந்தால், ஒருவரும் பிடிக்க முடியாது.”

படம் 11

„சிலவேளை அது அப்படி இருக்கலாம்“, என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 12

“நீங்கள் என்ன பேசுகிறீர்கள்?! எனக்கு இதுதான் எல்லாவற்றிலும் முக்கியம், பெரிதாக இருப்பது, அதோடு எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அழகான நீண்ட **தும்பிக்கை** இருப்பது.”

படம் 13

„சிலவேளை அது அப்படி இருக்கலாம்“, என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 14

“என்னால் உண்மையில் நீந்த முடியாது, என்னுடைய கால் **விரல்களுக்கிடையேயுள்ள தோல் (சவ்வு)** இல்லாமல். மேலும் எல்லாவற்றிலும் முக்கியம், நடப்பதைப் தவிர நீந்துவது.”

படம் 15

„சிலவேளை அது அப்படி இருக்கலாம்“, என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 16

“கடைசி வந்தாலும் இல்லை!”, என்று பீவர் கத்தியது. „எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால், **பெரிய பலமான பற்கள்** இருப்பது, சாப்பிடவும், தம்மை காப்பாற்றிக் கொள்ளவும் அதோடு ஒரு சொந்த வளையை (வசிப்பிடத்தை) அமைக்கவும் முடியும்.”

படம் 17

„சிலவேளை அது அப்படி இருக்கலாம்“, என்று மற்றவர்கள் யோசித்தார்கள்.

படம் 18

“சிலவேளை இவை எல்லாமே முக்கியமானவை”, என்று அறிவாளியான ஆந்தை கூறியது.

படம் 19

“எல்லாமா?!” மற்றவர்கள் கத்தினார்கள்.

படம் 20

“இல்லை, எல்லாம் சேர்ந்து இல்லை! எங்களில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்று முக்கியமானது இருக்கின்றது!”

படம் 21

“அவ தான் சரி!“
„வாஸ்தவம்!“
„ஆம்!“
„அப்படித்தான்!“
“சரி!”
“அது உண்மை!”
“அது சரி!”

படம் 22

அதோடு முடிவில் எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள்.

# உங்களுக்கு இந்த மிருகங்களைத் தெரியுமா?

**யானை**

**ஆந்தை**

**முயல்**

**பீவர்**

**ஒட்டகச்சிவிங்கி**

**வாத்து**

**முதலை**

**சிங்கம்**

**கரடி**